ॐ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம :

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

## வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்
(பதிவு எண்: 226 / 1992)



சத்திரப்பட்டி சாலை,
வேதபுரீ, தேனி. - 625 531






ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# உள்ளம் தோறும் வள்ளுவம்

## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்

## ஸனாதன நெறியில் வள்ளுவம்

## அறத்துப்பால்

SRI SWAMI CHIDBHAVANANDA ASHRAMAM
VEDANTA SASTHRA PRACHARA TRUST
VEDAPURI, THENI-625 531-TAMIL NADU

# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

## பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்



நாள் :
01, ஐப்பசி 2025

Date:
18, October 2025

www.vedaneri.org

வகுப்பு 09








பாயிரம்

அதிகாரம் : 4

# அறன் வலியுறுத்தல்

## அறத்தின் வலிமையை உணர்த்துதல்























அறன் = அறம் = தர்மம்.

வலியுறுத்தல் = வலிமையை - சக்தியை - மேன்மையை - சிறப்பை - அறிவுறுத்துதல் - எடுத்துக்கூறுதல்

1. நீத்தாரால் எடுத்துரைக்கப்பட்ட அறம், பொருள், இன்பம் மூன்றனுள் அறம் இம்மைப்பயன், மறுமைப்பயன், வீடு என மூன்றையும் தருதலால் அறத்தின் மேன்மை தனியாகக் கூறப்படுகிறது.

2. சிறப்பானவற்றுள் எல்லாம் சிறப்பானது துறந்தார் சிறப்பு. அதற்கடுத்த சிறப்புடையது அறம். ஆகவே அதன் பின் வைக்கப்பட்டது.

3. நீத்தாரின் சிறப்புக்குக் காரணம் அவர்கள் கடைப்பிடித்த அறம். ஆகவே அறத்தின் வலிமை கூறப்படுகிறது.

பொருள், இன்பம் போலன்றி இம்மை, மறுமை, வீடு மூன்றிற்கும் ஸாதனமாவதால் அறத்தின் மேன்மை தனியே கூறப்படுகிறது.

**இன்பம்** - இங்கே அனுபவித்துத் தீர்ப்பது.

**பொருள்** - இம்மை மறுமைகளில் அனுபவிக்கும் இன்பத்திற்குத் துணைக் காரணமாயிருப்பது.

**அறம்** - இம்மை மறுமை வீடு மூன்று நிலைகளிலும் அனுபவிக்கும் இன்பத்திற்கு முதற்காரணமாயிருப்பது.









குறள்கள் 1 & 2

அறம் செய்தல் ஆக்கத்திற்கு - இன்பத்திற்குக் - காரணம்

அறத்தை விடுதல் - கேட்டிற்கு - துன்பத்திற்குக் - காரணம்

குறள் 3

அறம் செய்யும் முறை

குறள்கள் 4 & 5

அறத்தின் இலக்கணம்

குறள்கள் 6 - 9 அறத்தின் பயன்

மறுமைக்குத் துணையாகும் (6, 7)

வீடு பயக்கும் (8)

இம்மையில் இன்பமும் புகழும் தரும் (9)

குறள்: 10 முடிவு

செய்வதும் விலக்குவதும் நிச்சயித்துக்குக் கூறுதல்







**அறம்** - தர்மம் - வாழ்க்கை முறை

**ஸாமான்யம்** - பொது

1. நற்பண்புகள், ஒழுக்கம்
2. நற்செயல்களைச் செய்தல்

**விசேஷம்** - தனிப்பட்டவை

3. ஸம்ஸ்காரங்கள் எனப்படும் சடங்குகள் (ஒரு தனி ஜீவனின் வாழ்வில் பிறப்பிலிருந்து மரணம் வரை செய்ய வேண்டிய சாஸ்த்ரப்படியான சடங்குகள்)
4. மதம் சார்ந்த பண்டிகைகள், திருவிழாக்கள்
5. உறவுகள் (ஜீவர்களுக்குள்ள உறவு முறைகள்)
6. பாவனை (நம்மை, உலகை நாம் எப்படிப் பார்க்கிறோம் என்ற மனப்பாங்கு)

இவை அனைத்தும் அறம் ஆகும்.





## 1. சிறப்பீனும் செல்வமும்ஈனும் அறத்தினூஉங்கு
## ஆக்கம் எவனோ உயிர்க்கு.


வீடுபேற்றைக் கொடுக்கும். ஸ்வர்க்கம் முதலான செல்வத்தையும் கொடுக்கும். (ஆதலால்) (மனிதர்களாகிய ஜீவர்களுக்கு) அறத்தைக்காட்டிலும் உயர்வைத் தருவது யாது? (வேறில்லை என்பது பொருள்)

சிறப்பு – எல்லாப்பேற்றிலும் சிறந்தது என்றதால் வீடுபேறு சிறப்பு எனப்பட்டது.


ஆக்கம் – பெருக்கம் – மேன்மேன் உயர்தல். (காரியவாகு பெயர்)

மனித உடல் எடுத்திருக்கின்ற உயிர்களுக்கு அறத்தைக் காட்டிலும் மேம்பட்ட நன்மையைத் தருவது வேறொன்றில்லை.

## 2. அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை மறத்தலின் ஊங்கில்லை கேடு.



ஒருவனுக்கு அறத்தை கடைபிடித்தலைவிட மேலான சிறப்பைத் தருவதும் இல்லை. அவ்வறத்தை (மோஹத்தால்) மறந்துவிடுதலைவிட மேலான துன்பத்தைத் தருவதும் இல்லை.



ஆக்கம் = செல்வம் - செல்வத்தினால் வரும் இன்பம்

கேடு = அழிவு - துன்பம்



முதல் இரண்டுபாட்டாலும் இன்பத்துக்கும் துன்பத்துக்கும் காரணம் கூறப்பட்டது.



## 3. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
## செல்லும்வாய் எல்லாம் செயல்.

(தத்தமக்கு) முடிந்தவரையில் அறமாகிய நற்செயல்களை விட்டுவிடாமல் முடிந்த வழிகளிலெல்லாம் செய்ய வேண்டும்.



முடிந்தவரை - இல்லறத்தில் - செல்வத்தின் அளவிற்கேற்ப.
துறவறத்தில் - உடல்நிலைக்கேற்ப.

ஓவாமை - நடுவே விட்டுவிடாமை






செல்லும்வாய் (வழி) = முக்கரணங்கள் - மனம், வாக்கு, காயம்.

முறையே அவற்றால் செய்யும் அறங்கள் = நற்சிந்தனை, நற்சொற்கள், நற்செயல்கள்.

மனம், வாக்கு, காயம் எனும் முக்கரணங்களாலும் கூடுமானவரை இடைவிடாது அறம் செய்ய வேண்டும் என்பது கருத்து.

அறம் செய்யும் முறை கூறப்பட்டது.



# 4. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற.

(அறம் செய்பவன்) தன் மனதில் குற்றம் இல்லாதவனாக, இருக்கக்கடவன் அறமாவது அவ்வளவே. (மனத்தூய்மை இல்லாத) சொல்லும் செயலும் ஆரவாரத்தன்மை உடையனவாகும்.

அல்லது

எல்லா அறச்செயல்களின் நோக்கமும் மனத்திலுள்ள (விருப்பு வெறுப்பு முதலான) அழுக்குகள் அனைத்தும் நீங்கி தூயமனத்தன் ஆதல் ஆகும். இந்த நோக்கம் இல்லாமல் செய்யப்படுவது துன்பத்தை முடிவாகத் தருவதாகும்.

மனத்தூய்மையோடு செய்வது (அ) மனத்தூய்மைக்காகச் செய்வது அறம் ஆகும்.





மாசு = அழுக்கு = குற்றம் - விருப்பு வெறுப்பு முதலான தீய குணங்கள்.

ஆகுல நீர = ஆரவாரம் - ஆடம்பரத்தன்மை - பிறர் அறிவதற்காகச் செய்வது. அது புண்ய பலனைத் தராது.

மனதில் விருப்பு வெறுப்பு முதலான அழுக்குகள் இல்லாமல் செய்வதே அறமாகும்.

அறத்தின் இலக்கணம் கூறப்பட்டது.

அல்லது

மனத்தூய்மை (சித்த சுத்தி) க்காக செய்யப்பட வேண்டுவது அறமாகும்.

அறத்தின் நோக்கம் கூறப்பட்டது.



## 5. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்ற தறம்.

பொறாமையும் ஆசையும் கோபமும் கடுஞ்சொல்லும் ஆகிய இந்நான்கையும் நீக்கிச் செய்யப்படுவது அறமாகும்.



பொறாமை = பிறர் ஆக்கம் பொறுத்துக்கொள்ளமுடியாத தன்மை

அவா = விஷயங்களின் மேல் செல்லுகின்ற ஆசை

வெகுளி = ஆசை தடைப்படும்பொழுது எழும் கோபம்

இன்னாச்சொல் = பிறருக்குத் துன்பத்தைத் தருகின்ற கடுமையான வார்த்தைகள் இவற்றோடு செய்யப்படுவது அறம் ஆகாது.

இவை இரண்டு பாட்டாலும் அறத்தினது இயல்பு - இலக்கணம் - கூறப்பட்டது.

# 6. அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
# பொன்றுங்கால் பொன்றாத் துணை.

பின்னொரு காலம் (வயதான பிறகு) செய்து கொள்ளலாம் என்று நினைக்காமல் அறத்தை (இப்பொழுதே நாள்தோறும்) செய்வீராக. அந்த அறமானது மரணமடையும் காலத்து - உடலிலிருந்து உயிர் நீங்கும் காலத்தில் - உயிரோடு (ஜீவனோடு) அழியாமல் உடன்வரும் துணையாகும்.

பொன்றுதல் = அழிதல், மரணம் அடைதல்



உடலுக்கு மரணம் எப்பொழுது வரும் என்று தெரியாது. உயிர் எனப்படும் ஜீவன் அநாதியானது. புண்ய பாபத்திற்கு ஏற்றாற்போல அடுத்தடுத்த உடல் எடுப்பது.

இன்பத்தைத் தருவது புண்யம். அடுத்தடுத்த பிறவிகளில் இன்பமாக இருக்க விரும்பினால் நிலையில்லாத இந்த மனித உடம்பு இருக்கும்பொழுதே நாளை செய்யலாம் என்று நினைக்காமல் இன்றே அறத்தைச் செய்ய வேண்டும் என்பது கருத்து.


அறத்தின் பயனாக மறுமை இன்பம் கூறப்பட்டது.











## 7. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
## பொறுத்தானோ டூர்ந்தான் இடை.

அறத்தின் பயன் இதுவென்று (சாஸ்த்ரங்களை மேற்கோள்காட்டிச்) சொல்ல வேண்டியது இல்லை. பல்லக்கை (சிரமத்துடன்) சுமந்து செல்பவனோடு அதன் மேல் (சுகமாக) அமர்ந்து நடத்துபவனைப் பார்த்தாலே (ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தாலே) தெரிகிறது.

அறத்தாறு = அறத்தின் பின்வருகின்ற பயன்

சிவிகை = பல்லக்கு

பொறுத்தல் = சுமத்தல்

ஊர்தல் = செல்லுதல்



**என** = சொல்ல (செய என்னும் எச்சச்சொல் அத்ருஷ்ட பலனைக் கூறும் சப்த ப்ரமாணம் எனப்படும் ‘சாஸ்த்ரங்கள் வாயிலாகச் சொல்ல’ எனும் பொருள் கொண்டது.)


**இடை** = இடத்தில் (சொல்லெச்சமாக உணரப்படும் - அறியப்படும் - என்பதைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.)

சாஸ்த்ர ப்ரமாணத்தால் (ஆகம அளவையால்) மட்டுமின்றி ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தாலும் (காட்சியளவையாலும்) அறியப்படும் என்று அறம் அழியாத துணையாதல் தெளிவாகக் காட்டப்பட்டது.

இரண்டு பாட்டாலும் (6, 7) அறத்தின் பயனாக மறுமை இன்பம் கூறப்பட்டது.

## 8. வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன் வாழ்நாள் வழியடைக்கும் கல்.





ஒருவன் (செய்யாமல்) வீணாகும் நாள் இல்லாமல் ஒவ்வொருநாளும் அறத்தைச் செய்து வருவானென்றால் அது அவன் இன்னொரு பிறவி எடுக்கும் வழியை அடைக்கும் கல்லாகும். (அறம் பிறவாநிலையை அடைவிக்கும் என்பது கருத்து)

வீழ்நாள் - வீணாகும் நாள்

வாழ்நாள் - பிறவியெடுத்து வாழுகின்ற நாள்

நன்று - நன்மையைத் தரும் நற்சிந்தனை, நற்சொற்கள், நற்செயல்கள்.

பிறவிக்குக் காரணம் புண்ய பாபங்கள். புண்ய பாபங்களுக்குக் காரணம் ஒருவன் முந்தைய மனிதப்பிறவியில் செய்த நல்வினை தீவினைகள். ஒருவன் தீவினைகளைத் தவிர்த்து நல்வினைகளை மட்டுமே பலனில் பற்றில்லாமல் செய்து வருவானென்றால் அதனால் ஒரு புண்யம் ஏற்பட்டு மனத்தூய்மை உண்டாகும். அது விவேக வைராக்யத்தைக் கொடுத்து ஞானத்தேடலை உண்டு பண்ணும். ஈச்வர, சாஸ்த்ர, ஸற்குரு அனுக்ரஹத்தால் அவன் ஞானத்தைப் பெற்று பிறவாநிலை அடைவான்.



அறத்தின் பயனாக வீடுபேறு கூறப்பட்டது.





## 9. அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
## புறத்த புகழும் இல.

அறத்தின் பயனாக வருவதே (உண்மையான) இன்பமாகும். அதற்கு மாறானது (அதர்மத்தால் வருவது) எல்லாம் துன்பமாகும். அதனால் (ஒருவனுக்கு) புகழும் உண்டாவதில்லை.

அதர்மத்தால் வருவது அப்போதைக்கு இன்பமாகத் தெரிந்தாலும் துன்பமாகவே முடியும். அதனால் இகழ்ச்சியும் உண்டாகும்.

அறவழியில் இல்வாழ்க்கை நடத்துபவன் தன் மனைவி மக்களோடு இன்பமாக வாழ்கிறான். அதனால் புகழும் உண்டாகிறது.

அறம் இவ்வுலக இன்பத்தையும் கொடுக்கும் என்பது கூறப்பட்டது.

## 10. செயற்பால தோறும் அறனே ஒருவற்கு
## உயற்பால தோறும் பழி.

ஒருவன் (தன் வாழ்நாள் முழுதும்) செய்யத்தக்கது அறச்செயலேயாகும். விடத்தக்கது (எப்பொழுதும்) தீவினையேயாகும்.

பழி = பழிக்கப்படும் தீவினைகள் - கார்யவாகுபெயர்.

இம்மை, மறுமை, வீடுபேறு மூன்று நிலைகளிலும் இன்பத்தைத் தருவது அறம் என்ற தர்மம். ஆகவே, அறமே செய்யத்தக்கது.

இம்மை, மறுமை இரண்டிலும் துன்பத்தைத் தருவதும் முடிவில்லாத பிறவியைத் தருவதும் அதர்மம் ஆகும். ஆகவே, அது விடத்தக்கதாகும்.

இதனால் செய்வதும் விலக்குவதும் நிச்சயித்துக் கூறப்பட்டது.

ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்- தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(மாங்குடி மருதனார்)

1. Youtube Channels:

    Swami Omkarananda

    Vedapuri Events

    Swami Purnananda Tamil

SRI SWAMI CHIDBHAVANANDA ASHRAMAM
நன்றின்பால் உய்ப்பது அறிவு
विद्यया विन्दते अमृतम्
VEDANTA SASTHRA PRACHARA TRUST
VEDAPURI, THENI-625 531-TAMIL NADU

2. Instagram - swami om karananda

3. Facebook - Swami omkarananda

4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam

5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam



94430 51910    www.vedaneri.org    thirukkuralclasses@gmail.com